கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், கரூர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.வே. விஜயலட்சுமி, பி.எஸ்ஸி.,
உதவி இயக்குநர், கரூர்.
*************************

ந.க.எண். 3220/2019/அ1-1 நாள்: 19.11.2020

பொருள் : நிர்வாகம் - கைத்தறி மற்றும் துணிநூல் துறை - 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கலந்தாய்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.1341/PSD -G1/2019, நாள்: 15.02.2019
2. சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.6089/2019/இ2-1, நாள்: 22.02.2019
3. சென்னை கைத்தறி மற்றும் துணிநூல், இயக்குநர் அவர்களின், விரைவுக்குறிப்பாணை ந.க.6089/2019/இ2 நாள்: 01.10.2020

--------

**ஆணை:**

பார்வையில் 1-ல் காணும் கடிதப்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு நேரடி நியமனம் மூலம் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக இத்துறையில் பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்கண்ட இளநிலை உதவியாளரின் பணியானது, மேற்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என்று பார்வை 3-ல் காணும் இயக்குநரக விரைவுக்குறிப்பாணையில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க கலம் எண்.4-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள்முதல் இளநிலை உதவியாளர் பணிநிலையில் வரன்முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | இளநிலை உதவியாளர் பெயர் (திருமதி) | அரசுப்பணியில் சேர்ந்த நாள் | வரன்முறைப்படுத்தப்படும் தேதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பொ. தாரணி | 26.02.2019 முற்பகல் | 26.02.2019 முற்பகல் |

2..

Scanned with CamScanner

மேற்காண் தனியரின் பணி இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டது என்பது தொகுதி IV பணிநிலையில் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 - ஆம் ஆண்டிற்கான நேரடி நியமனம் தொடர்பாக, சென்னை/மதுரை கிளை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள ரிட்மனு வழக்கின் தீர்ப்பின் முடிவிற்கு உட்டபட்டதாகும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தனியரின் தகுதிகாண் பருவமானது இளநிலை உதவியாளர் பணிநிலையில் கலம் எண் (4)-ல் காணும் நாள் முதல் தகுதிகாண் பருவ தொடக்க நாளாக கணக்கிடப்பட்டு ஆணையிடப்படுகிறது. மேலும் மேற்காணும் தனியர் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதி காண் பருவம் முடிக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

19/11/20

உதவி இயக்குநர்,
கைத்தறி மற்றும் துணிநூல்,
கரூர்.

19/11/20

19/11/20

பெறுநர் :
திருமதி.பொ. தாரணி, இளநிலை உதவியாளர்.

நகல் :
1. கைத்தறி இயக்குநர், சென்னை அவர்களுக்கு
   - பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. இருப்பு கோப்பு

Scanned with CamScanner